# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜனவரி 27, 2024

Weekly E-paper ● January 27, 2024



## கண்ணியம் இல்லாத அண்ணாமலை!

சுப. வீரபாண்டியன்

**பா.ஜ.கவின் அரசியல் ஆயுதமான அயோத்தி இராமர்!**

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

**ராஜதந்திரம் !**

தலையங்கம்

**ராகுலின் யாத்திரை, மிரளும் பா.ஜ.க அரசு!**

சாரதா தேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜனவரி 27, 2024

Weekly E-paper ● January 27, 2024


# கண்ணியம் இல்லாத அண்ணாமலை!

சுப. வீரபாண்டியன்

"முளைத்து மூன்று இலை விடாத " என்பது போல், அரசியலுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் கூட ஆகாத அண்ணாமலை, இன்றைக்குத் தமிழ்நாட்டு அரசியலில் மிக மோசமான முன் வடிவங்கள் பலவற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இந்தியாவை ஆளும் ஒரு கட்சிக்கு மாநிலத் தலைவராக இருக்கும் அவர், கவனமாகப் பேசவில்லை என்றாலும் பரவாயில்லை, கண்ணியக் குறைவாகப் பேசாமலாவது இருக்க வேண்டும். ஆனால் அவர் உதிர்க்கும் சொற்கள் எல்லாம் அநாகரிகமாகவும், அடாவடித்தனமாகவும் உள்ளன!

ஓரிரு நாள்களுக்கு முன்னால், அவரைக் கண்டித்துச் சென்னையில் ஊடகவியலாளர்கள் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்களைப் பேட்டி எடுத்த ஒரு தொலைக்காட்சி நெறியாளர், "பல்லுப்படாமல் " கேள்வி கேட்டதாக அண்ணாமலை குறிப்பிட்டிருந்தார். கொச்சையான இன்னொரு பொருளைத் தரும் அந்தத் தொடரை ஒரு கட்சியின் மாநிலத் தலைவர் எப்படிப் பயன்படுத்தலாம் என்று கேட்டதற்கு, அண்ணாமலை சொல்லி இருக்கிற விடை இன்னும் மோசமாக இருக்கிறது!



எங்கள் ஊரில் எல்லாம் இப்படிப் பேசுகிற பழக்கம் உண்டு என்று சொல்லி இருக்கிறார். எந்த ஊரில் அப்படிப் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை! தான் பொது இடத்தில் கேவலமாகப் பேசிவிட்டு, தான் பிறந்த ஊரையும் தேவையில்லாமல் இங்கே அவர் கேவலப்படுத்தி இருக்கிறார். இதற்கு அந்த ஊர் மக்களும் அவரைக் கண்டிக்க வேண்டும்.

அப்படியே அது ஊர் வழக்கமாக இருந்தாலும், பொது இடத்தில் ஒரு பொறுப்பான பதவியில் இருக்கும் ஒருவர் எதனை எங்கே பயன்படுத்தலாம் என்பதை அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு தலைவரும் இது தங்கள் ஊர்ப் பழக்கம் என்று கொச்சையாக பேசத் தொடங்கினால், அது எங்கே போய் முடியும்? தமிழ்நாட்டின் பொது மேடைகளும், பத்திரிக்கையாளர் சந்திப்புகளும், கொச்சையான இடத்திற்கான எடுத்துக்காட்டாக தானே ஆகிவிடும்!

இதற்காக வருத்தம் தெரிவிப்பீர்களா என்று கேட்டபோது, மன்னிப்பு கூந்தல் எல்லாம் கேட்க முடியாது என்று விடை சொல்லி இருக்கிறார்!

எவ்வளவு திமிர்! எவ்வளவு ஆணவம்!!

அண்ணாமலையைப் போல், ஆணவத்தில் தலை வீங்கி ஆடிய ஆயிரம் பேர்களை வரலாறு பார்த்து இருக்கிறது!

கண்ணியம் மிக்க அறிஞர் அண்ணா போன்றவர்களைத்தான் காலம் நினைவில் வைத்துக் கொள்ளும். கண்ணியம் இல்லாத அண்ணாமலைகளை விசிறி அடித்து விடும்!

●

# பா.ஜ.கவின் அரசியல் ஆயுதமான அயோத்தி இராமர்!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

இந்திய ஒன்றியத்தை மதச் சார்பற்ற நாடாகப் பறை சாற்றியது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரை. அதைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது அண்மையில் நடைபெற்ற அயோத்தி இராமர் ஆலயத்தின் திறப்பு விழா. முழுமையாகக் கட்டி முடிக்கப்படாத நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை முன்வைத்து அவசர அவசரமாகத் திறக்கப்பட்டுள்ளது. நாடு முழுமைக்கும் பொதுவானவராக இருக்க வேண்டிய பிரதமர் அதை முன்னின்று நடத்தி இருக்கிறார். பகுத்தறிவு இயக்கங்கள் மட்டுமின்றி இந்து மதத்தின்பால் நம்பிக்கை கொண்டிருக்கும் கட்சிகள் கூட இந்த விழாவைப் புறக்கணித்திருக்கின்றன.

1526 ஆம் ஆண்டு இந்தியாவின் மீது படையெடுத்து வந்த முகலாய மன்னர் பாபர் முதலாம் பானிபட் போரில் இப்ராகிம் லோடியைத் தோற்கடித்து வட இந்தியாவில் ஆட்சியைப் பிடித்தார். இந்த வெற்றியைப் போற்றும் வகையிலும், பாபரின் புகழை நிலைநாட்டும் வகையிலும் அவரது தளபதி மிர் பாகி 1528 இல் ஒரு மசூதியைக் கட்டுவதற்கு முடிவெடுத்தார். 1529 ஆம் ஆண்டு பாபர் மசூதி கட்டி முடிக்கப்பட்டது. இந்திய விடுதலைக்கு பிறகு 1949 முதல் இந்து அமைப்பினர் அந்த இடத்தில் தான் இராமர் பிறந்தார். அங்கே அவருக்கு ஆலயம் அமைக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுப்பத் தொடங்கினர். 1984 ஆம் ஆண்டு விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் ராம் ஜென்மபூமி இயக்கம் தொடங்கப்பட்டு அதன் பிரச்சாரத் தலைவராக பாஜக தலைவர் எல்.கே.அத்வானி நியமிக்கப்பட்டார். 25.09.1990 அன்று குஜராத்தின் சோம்நாத்தில் இருந்து அயோத்தி நோக்கி ரத யாத்திரையை எல்.கே.அத்வானி தொடங்கினார். ரத யாத்திரை பீகாரில் தடுத்து நிறுத்தப்பட்டு எல்.கே.அத்வானி கைது செய்யப்பட்டார். இருப்பினும் 06.12.1992 அன்று கரசேவகர்களின் வன்முறை மூலம் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அ.இ.அ.தி.மு.கவின் அன்றைய பொதுச் செயலாளர் அம்மையார் ஜெயலலிதா கரசேவைக்கு ஆதரவு தெரிவித்ததுடன் அவரது ஆதரவாளர்களையும் அனுப்பி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2019 இல் உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோவில் கட்ட ஒப்புதல் வழங்கி த்தீர்ப்பளித்தது. பதவிக் காலத்திற்குப் பின் அந்த ஐவரில் ஒருவர் மாநிலங்களைவை உறுப்பினராகவும், ஒருவர் ஆளுநராகவும், ஒருவர் தேசிய நிறுவனங்களின் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர் என்பது அனைவரும் அறிந்ததே. அதைத் தொடர்ந்து ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்தஷேத்ரா அறக்கட்டளை தொடங்கப்பட்டு 05.08.2020 இல் பிரதமர் மோடி அயோத்தி இராமர் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

பா.ஜ.க தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே இந்தப் பிரச்சனையை மையப்படுத்தித்தான்



அரசியல் செய்தது. 1984 நாடாளுமன்றத் தேர்தலில் வெறும் இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற பா.ஜ.க இராம் ஜென்மபூமி இயக்கம் உருவான பிறகு மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தி தங்கள் கட்சியை வளர்த்தது. அயோத்தி இராமர் என்ற அதே அரசியல் ஆயுதத்தைக் கையில் ஏந்தி மூன்றாவது முறையாகத் தொடர்ந்து வெற்றிபெறும் நோக்கில் எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க களமிறங்க இருக்கிறது. அதனால் தான் ஆலயத் திறப்பு விழாவையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது. மதநல்லிணக்கத்தின் அடையாளமாகத் திகழும் தமிழ்நாட்டில் இதை வைத்துக் கலவரத்தைத் தூண்ட திட்டமிட்ட பா.ஜ.க கூடாரத்திற்குத் தோல்வியே கிடைத்தது.

பிரதமர் மோடி முன்னின்று ஆலயம் திறப்பது இந்து மத ஆகமங்களுக்கும் எதிரானது என்று கூறி இந்தியாவின் தொன்மையான சங்கராச்சாரியார்களான துவாரகா, பூரி, சிருங்கேரி, ஜோதிர் மத் சங்கராச்சாரியார்கள் விழாவை புறக்கணித்தனர். அதேபோல் உத்தரப் பிரதேசத்தின் ஆளுநரான ஆனந்தி பென் படேல் விழாவிற்கு அழைக்கப்பட்ட நிலையில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு விழாவிற்கு அழைக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டார். சனாதனக் கொடுமை இந்து மதத்தில் இன்றும் நிலவி வருவதை இந்தச் சம்பவங்கள் உறுதி செய்கின்றன.

இதற்கெல்லாம் மேலாக ராஜஸ்தான் மாநிலம் ஜாலவர் மாவட்டம் கான்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முண்ட்லா கிராமத்தில் உள்ள தலித் மக்களிடமிருந்து அயோத்தி ராமர் கோவிலுக்காகப் பெறப்பட்ட நன்கொடை "கோவில் சடங்குகளுக்கு தலித்துகளின் பணம் ஏற்கப்படாது. அவர்கள் நன்கொடையில் அளிக்கப்படும் பிரசாதம் தூய்மையற்றதாகக் கருதப்படும்" என்று கூறி தலித் மக்களின் பணம் அவர்களின் வீடுகளுக்குச் சென்று திருப்பிக் கொடுக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் பா.ஜ.கவின் இந்து மக்கள் மீதான பாசம் உண்மையல்ல, அது பகல் வேஷம் என்பது தெளிவாக த்தெரிகிறது. இந்து மக்களின் பாதுகாவலர் என்று கூறிக்கொண்டு அந்த மதத்தின் பெரும்பான்மையான மக்களை இன்னலுக்கு ஆளாக்கும் பா.ஜ.கவின் உண்மை முகத்தை அப்பாவி இந்து மக்களிடம் தோலுரித்துக் காட்டுவது அவசியமாகிறது.

இராமர் என்ற அரசியல் ஆயுதத்தை வீழ்த்தி 1971 சட்டமன்றத் தேர்தலில் பெரு வெற்றி பெற்றது தி.மு.க. அந்த வெற்றி 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா முழுக்க எதிரொலிக்கட்டும். வெறுப்பு அரசியலை விதைப்பதன் மூலம் நாட்டைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்க நினைக்கும் பா.ஜ.க கூட்டத்திற்கு நாடாளுமன்றத் தேர்தலில் பாடம் புகட்டி "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற இந்தியத் துணைக் கண்டத்தின் பண்பாட்டை மீட்டெடுக்க ஒவ்வொரு இந்தியரும் உறுதியேற்போம்.

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ராஜதந்திரம்!

நிலஅமைப்பு, இனம், மொழி, பண்பாடு, நாகரிகம் என்று பன்மை நிலையில் ஒன்றுபட்டிருக்கும் இந்திய ஒன்றியத்தை இந்துத்துவா என்ற ஒரே சர்வாதிகாரக் குடையின்கீழ் கொண்டுவர சனாதன பா.ஜ.க முயன்று வருகிறது.



அதற்காக மக்கள் அறிவு பெற்றுவிடக் கூடாது, சிந்தனை பெற்றுவிடக் கூடாது என்று மதத்தையும், கோயிலையும் காட்டி, கல்வியைப் பின்னுக்குத் தள்ளி வருகிறது இன்றைய ஒன்றிய அரசு.

மதவாத, பாசிச, சர்வாதிகார பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதனால் எதிர்க்கட்சிகளால் வலிமையான ‘இந்தியா’ என்ற கூட்டணி உருவாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் சில தவறான விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்ற கவலையும் உண்டாகிறது.

நாங்கள் தனித்துப் போட்டியிடுவோம் என்று பேசுவதும், பிரதமர் வேட்பாளர் பெயராகத் தன் பெயரைச் சொல்லவில்லை, அதனால் மீண்டும் ‘தாமரை’யைத் தூக்கப் போகிறேன் போன்ற தொலைக்காட்சி செய்திகள் எதிரிகளுக்குச் சாதகமாகவும், மக்களைச் சோர்வடையச் செய்யும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியது இல்லை.

எந்த ஒரு நிறுவன அமைப்பும் கருத்து வேறுபாடு இல்லாமல் இருக்காது. அவைகளைக் கூடிப் பேசி நல்ல முடிவுக்கு வரவும் வழி இருக்கிறது.

நாட்டுக்காக, மக்களுக்காக பொதுவாழ்க்கையில் இருக்கும் தலைவர்களிடம் பொதுநலன் மட்டுமே இருக்கும்.

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்து விடக்கூடாது.

இன்னும் 3 மாதங்களில் வரும் தேர்தல் வாழ்வா? சாவா? என்ற உயிரின் வாதையில் இருக்கிறது.

ஓங்கிக் குரல் கொடுப்பதைவிட, கூடிப்பேசி பா.ஜ.கவை வீழ்த்துவதே ‘ராஜதந்திரம்’.

# நினைவில் மொழிப் போர் தியாகிகள்!




ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை– 600 024,**

தொலைபேசி: 044-2472 6408

# ராகுலின் யாத்திரை, மிரளும் பா.ஜ.க அரசு!

**சாரதா தேவி**

காங்கிரசு கட்சியின் மேனாள் தலைவர் ராகுல் காந்தி, முதல் கட்டமாக 2022 செப்டம்பர் 7 இல் தொடங்கி 2023 ஜனவரி 30இல் முடித்த, கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, தெற்கிலிருந்து வடக்கு வரையிலான 'பாரத் ஒற்றுமைப் பயணம்' மேற்கொண்டார். 4,080 கி.மீ. தொலைவை, எளிய மனிதராக, தன் நடைபயணத்தால் மக்களோடு நெருங்கிப் பேசியும், அவர்கள் பேசுவதைக் கவனத்துடன் கேட்டும், 'மொகபத் கீ துகான்' என பா.ஜ.க.வின் வெறுப்பிற்கு எதிரான அன்பின் கடையைத் திறப்பதாக அவர் ஏந்திய முழக்கம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவருடைய செல்வாக்கு வளர்வதைப் பொறுக்க முடியாமல் திணறியது பா.ஜ.க. அரசு.

அதைத் தொடர்ந்தே, அவர், 2023 மார்ச் மாதம் நடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் பல ஆண்டுகள் கழிந்த ஒரு வழக்கில், குஜராத் நீதிமன்றத்தால் 2 ஆண்டுகள் தண்டனை பெற வைக்கப்பட்டு, அதன் காரணமாக அவசர அவசரமாகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். உச்சநீதிமன்றத் தலையீட்டால் மீண்டும் ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது இரண்டாம் கட்டமாக 'பாரத் ஒற்றுமை நீதி யாத்திரை' யை இந்தியாவின் கிழக்கு எல்லையான மணிப்பூர் - இம்பாலில் தொடங்கி மேற்கு எல்லையான மும்பை வரை 14 மாநிலங்கள், 110 மாவட்டங்களை அடையுமாறு திட்டமிட்டு இந்த ஆண்டு, 2024 ஜனவரி 14ஆம் நாள் பயணம் தொடங்கிவிட்டார். 67 நாள்களில் 6,713 கி.மீ தொலைவில், 355 மக்களவைத் தொகுதிகளைத் தொடுகிறது பயணம். இம்முறை தேர்தல் நெருங்குவதால், நேரம் கருதிப் பயணத்தை பெரும்பாலும் பேருந்திலும், சிறிது தொலைவுகளை நடந்தும் சேர முடிவெடுத்திருக்கிறார்கள்.

ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, இராமர் கோயிலை வைத்து அரசியல் செய்யலாம் எனப் பேரார்வமாக, அரையும் குறையுமாக, இன்னும் கட்டி முடிக்கப்படாத கோயிலைத் திறக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது, ராகுல் மக்களின் உண்மையான சிக்கல்களான உணவு, கல்வி, வேலைவாய்ப்பு, ஒற்றுமை பற்றி நான் பேசப் போகிறேன் எனக் கிளம்பிவிட்டார். பொறுக்குமா பா.ஜ.க.வினருக்கு?

ஆளும் பா.ஜ.க அரசு, இம்பாலில் தொடங்க வேண்டிய பயணத்தைத் தன் நெருக்கடியால் தௌபால் மாவட்டத்திற்கு மாற்ற வைத்தது. அங்கே கொடி அசைக்கும்போது கூட்டம் இவ்வளவு தான் இருக்க வேண்டும் என நிபந்தனை விதித்தது. நடைபயணமே இந்த அரற்றல்களுக்கும் மிரட்டல்களுக்கும் எதிராகத்தான். "சஹோ மத்; டரோ மத்" "துயருறாதே; பயப்படாதே" இது தான் பயணத்தின் முழக்கம். மணிப்பூரில் தொடங்கிய பயணம், மூன்றாம் நாள் நாகாலாந்தில் தொடர்ந்தது. அங்கே இரண்டு நாள்கள் முடித்து

ஐந்தாம் நாள் அசாம் வந்தார் ராகுல். அசாமில் 8 நாள்கள் பயணத்திட்டம்.

வடகிழக்கு மாநிலங்களில் நிலவும் பழங்குடி மக்களின் தனித்த அரசியலை, அவர்களுடைய வெள்ளந்தித் தனத்தை, தன் பெரும்பான்மை மதவாத அரசியலாலும், குயுக்திகளாலும் களேபரம் செய்திருக்கிறது பாரதிய ஜனதா கட்சி. பழங்குடிகளின் கட்சிகளை ஆதரிப்பதாகச் சொல்லி, ஆட்சியமைத்து, அவர்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளி, ஏமாற்றியும் வருகிறது பா.ஜ.க. அங்கிருக்கும் பா.ஜ.க முதல்வர்கள் ஊழலில் திளைக்கிறார்கள்.

அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா ஷர்மாதான் இருப்பதிலேயே மோசமான ஊழல்வாதி என தாக்குதல் தொடுத்திருக்கிறார் ராகுல். அசாம் அரசு ராகுலின் பயணத்தைக் கவுகாத்தி நகருக்குள் நுழைய விடாமலும், பல்வேறு நிகழ்ச்சிகளுக்குத் தடை விதித்தும் தன் வெறுப்பைக் காட்டி உள்ளது. அதுமட்டுமல்லாமல், நகர எல்லைக்குள் நுழைவதைத் தடுக்க இரண்டு இடங்களில் தடுப்புகளையும் ஏற்படுத்தி உள்ளது. காங்கிரஸ் நிர்வாகிகளுக்கும், காவல்துறைக்கும் நடந்த தள்ளுமுள்ளுவில் இருதரப்பும் காயமடைந்துள்ளனர். ராகுல் மீது வழக்கு பதியச் சொல்லி இருக்கிறார் அசாம் முதல்வர். மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு கைது செய்வார்களாம்!



முன்னதாக மேகாலயா- அசாம் எல்லையில் இருக்கும் அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் உரையாற்ற இருந்த அனுமதியையும் திரும்பப் பெற வைத்துள்ளார்கள். பல்கலைக்கழக வாயிலில் பேருந்தை நிறுத்திய ராகுல், பேருந்தின் மீது ஏறி நின்று மாணவர்கள் இடையே உரையாற்றத் தொடங்கி இருக்கிறார்.

ஜனவரி 22, திங்களன்று, இவர்களின் ராமர் கோயில் நாடகம் நடந்தபோது, நிகோன் எனும் இடத்தில் அசாமின் சமூக சீர்திருத்தவாதியும் மதகுருவுமான ஸ்ரீமந்த சங்கரதேவாவின் படத்ரவா புனித தலத்தின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற ராகுலுக்கு அனுமதி மறுத்திருக்கிறார்கள். ஜனவரி 19, வெள்ளியன்று லக்கிம்பூரில், பா.ஜ.க. குண்டர்கள் காங்கிரசாரின் வாகனங்கள் மீது ஏறித்தாக்குதல் நடத்தி உள்ளார்கள்.

இந்த அராஜகங்கள் சொல்வதெல்லாம் ஒன்று தான். பா.ஜ.க.வினர் அச்சமடைந்திருக்கிறார்கள். அமலாக்கத் துறைக்குப் பயந்தவர்களே இராமர் கோயிலுக்குப் போனார்கள். வெறுப்புக்குப் பயந்தவர்கள் அன்புக் கடைக்குப் போய்விடுவார்களோ என அஞ்சத் தொடங்கியிருக்கிறது பா.ஜ.க. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian